### முத்தமிழறிஞர் கலைஞர் – முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் தான்

# தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கை எட்டியுள்ளது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

**சென்னை, செப். 22-**

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சைதை பஜார் சாலையில் இயங்கி வரும் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தில் பயிற்சி முடித்த மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி (19-9-2025) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணி யன் சிறப்புரையாற்றினார்.**

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கொளத்தூர் தொகுதியில் 'Anitha Achievers Academy' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் பெண்கள் பயனடைகிற வகையில் கணினி பயிற்சி அளிப்பதும், மகளிர் மேம்பாட்டு திறன் பயிற்சிகள் மூலம் தொழிற்பயிற்சி அளிப்பதுமான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் சைதாப்பேட்டையில் 2020 ஆம் ஆண்டு கலைஞர் கணினி கல்வியகம் என்ற அமைப்பை கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்தக் கலைஞர் கணினி கல்வியகத்தின் மூலம் சைதாப்பேட்டையில் படித்து முடித்த பெண்கள் இளைஞர்களுக்கு கணினி பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

### மகளிர் திறன் மேம்பாட்டு மையம்!

இதுவரை 13 தொகுப்புகளுக்கான பயிற்சிகள் முடிவுற்று இருக்கிறது. 1500 இளைஞர்கள் கணினி பயிற்சியினை பெற்றிருக்கிறார்கள். Tally PRO, Tally Guru, Tally AS போன்ற கணினி பயிற்சிகள் அளித்து அதன் மூலம் வேலை வாய்ப்பையும் பெற்று, ஏராளமான இளைஞர்கள் இன்றைக்கு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற பயிற்சியானது வரும் 30-ஆம் தேதியோடு 14 வது தொகுப்புக்கான பயிற்சி தொடங்கப்படவிருக்கிறது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் நாள் சைதாப்பேட்டையில் மீண்டும் ஒரு அமைப்பாக கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் என்ற அமைப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திறன் மேம்பாட்டு மையத்தில் இன்றைக்கு மகளிருக்கான மிக எளிதான வேலை வாய்ப்பு என்று எடுத்துக் கொண்டால், அவசியமான பயிற்சி என்று எடுத்துக் கொண்டால், தையல் பயிற்சி என்பதாகும். குழந்தைகள் மகளிர் ஆடவர் என்று யாருக்கானதாக இருந்தாலும், தையல் பயிற்சி எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிவோம்.

அந்த வகையில் வீட்டிற்கு ஒருவர் தையல் பயிற்சி பெற்றிருந்தால் கூட அவர்களுக்கு வருமானம் உண்டு என்ற முறையில் மிகப்பெரிய அளவில் தேவையான ஒன்றாக இருந்து வருகிறது. அந்த வகையில் தான் அதை கற்றுக் கொடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அதேபோல் அழகுகலைப் பயிற்சி ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும், ஆள் பாதி ஆடை; பாதி என்பதைப் போல அழகு கலை பயிற்சிக்கு எந்த அளவிற்கு தேவை இருக்கிறது என்பதை நாம் திருமணங்களுக்குச் செல்லும் போது தான் தெரியும். மாப்பிள்ளை வரவில்லை; பெண் வரவில்லை; என்று மணி கணக்கில் நம்மை காக்க வைத்து விடுவார்கள். அப்போது கேட்டால் பியூட்டி பார்லரில் இருக்கிறார்கள் என்று சொல்லிவிடுவார்கள். அந்த வகையில் அவசியமானதாக ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது.

அந்த அழகு கலை பயிற்சியை, தையல் கலைப் பயிற்சியை சைதைத் தொகுதியை சார்ந்த மகளிருக்கு கற்றுத் தரலாம் என்று முடிவெடுக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் 90 மகளிருக்கு தையல் கலைப் பயிற்சியும், 50 மகளிருக்கு அழகு கலைப் பயிற்சியும், ஒரு தொகுதிக்கு வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டு 140 பேருக்கும் பயிற்சி முடித்தவுடன் மாண்பமை நீதியரசர் விமலா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

இரண்டாவது தொகுதி பயிற்சி முடித்தவர்களுக்கு விஜய் டிவி நீயா? நானா? நிகழ்ச்சி தொகுப்பாளர் கோபிநாத் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுசான்றிதழ்களை வழங்கினார். மூன்றாவது மற்றும் நாலாவது தொகுதிக்கான பயிற்சி முடித்தவர்களுக்கு யாரைக் கொண்டு சான்றிதழ் வழங்கலாம் என்று முடிவெடுத்த பொழுது மரியாதைக்குரிய சகோதரி தேவயானி அவர்கள் ஒரு திரைப்பட நடிகையாக மட்டும் அறிந்திராமல், சமூக ஆர்வலர் என்கிற பெயரில் தமது பங்களிப்பை ஆற்றி வருகிறார்கள். தம் பிள்ளையை எந்த பள்ளியில் படிக்க வைத்திருக்கிறாரோ, அதேப் பள்ளியில் தாமும் ஒரு ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பொதுவாகவே சமூக நலன் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தொடர்ச்சியாக அதில் விருப்பம் காட்டி வருகிறார்கள்.



முத்தமிழ் அறிஞர் பிறந்தநாள் விழாவில் நானும் இப்போது இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிற இனிய நண்பர் பேராசிரியர் சொற்கோ அவர்களும் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் நீங்கள் பங்கேற்க வேண்டும் என்று சொன்னவுடன், கலைஞருக்கு பிறந்தநாள் விழா அதில் நான் கலந்து கொள்வதை பெருமையாக கருதுகிறேன் என்று சொல்லி, கொஞ்சம் கூட தயக்கம் காட்டாமல் அந்த நிகழ்ச்சிக்கு வந்து பெருமை சேர்த்தார்கள்.

### தமிழ்நாட்டின் அடையாளமாக கலைஞர் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை!

கடந்த ஆண்டு தமிழர் திருநாளில் 40,000 மகளிர் கோலப்போட்டியில் கலந்து கொண்டு உலக சாதனையை படைத்தார்கள். அப்படி சைதாப்பேட்டை தாடண்ட நகர் அரசு ஊழியர்களுக்கான கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்குகிற நிகழ்ச்சியில் திருமதி தேவயானி அவர்கள் பங்கேற்க வேண்டும் என்று கேட்ட பொழுது அதிலும் மகிழ்ச்சியோடு பங்கேற்றார்கள். அப்படி இந்தச் சான்றிதழ் வழங்குகிற நிகழ்ச்சியிலும் சமூக நலன் சார்ந்து பயணித்துக் கொண்டிருக்கிற தேவயானி அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதி அழைத்த பொழுது மறுப்பு ஏதும் சொல்லாமல் இந்த நிகழ்ச்சிக்கு வந்து சிறப்பித்து இருக்கிறார்கள். அவர்களை சைதை தொகுதி மகளிர் சார்பாக வருக வருக என வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

சைதாப்பேட்டையில் ஏராளமான பணிகள் அதாவது கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை என்று தமிழ்நாட்டிற்கு அடையாளமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவ உபகரணங்கள் போல் இந்தியாவில் உள்ள எந்த மருத்துவமனையிலும் Double Baloon endoscopy, Auto MRI போன்ற மருத்துவ உபகரணங்கள் இந்தியாவில் உள்ள எந்த ஒரு அரசு மருத்துவமனையிலும் இல்லை. அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய சிறப்பான மருத்துவமனை ஒன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 2000-க்கும் மேற்பட்டவர்கள் வந்து புற நோயாளிகளாக பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் முதன்மையான மருத்துவமனையாக கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை விளங்குகிறது. அதேபோல் ஒன்றிய அரசு இந்தியாவில் இரண்டு இடங்களில் வயது மூத்தோருக்கான மருத்துவமனை அமையும் என்று அறிவித்தார்கள். அதில் ஒன்று டெல்லி எய்ம்ஸில் இருக்கிறது. மற்றொன்று சைதாப்பேட்டையில் அமைந்துள்ளது. டெல்லியில் உள்ள வயது மூத்தோருக்கான மருத்துவமனை எய்ம்ஸ் கட்டிடத்தில் ஒரு மாடியில் மட்டும் இயங்குகிறது. ஆனால் இங்கு சைதாப்பேட்டையில் ஆறு லட்சம் சதுர அடியில் பிரம்மாண்ட மருத்துவமனையாக இருந்து கொண்டிருக்கிறது இந்த முதியோருக்கான மருத்துவமனையில் தமிழ்நாடு முழுவதும் இருக்கும் வயது மூத்தோர் உடல் நலக்குறைவு என்றால் சைதாப்பேட்டை மருத்துவமனைக்கு வரத்தொடங்கி இருக்கிறார்கள்.

இந்தியா முழுவதும் இருக்கிற பீகாரிலோ, மகாராஷ்டிராவிலோ டெல்லிலோ போய் முதியோருக்கான மருத்துவமனை எங்கு இருக்கிறது? என்று கேட்டால் ஒன்று தான் இருக்கிறது. சென்னை சைதாப்பேட்டையில் தான் இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவில் பெரிய பெயரோடு இருக்கிறது.

அதில் ஒரு சிறப்பு என்னவென்றால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் தமிழ்நாட்டில் குழந்தை களுக்கான மற்றொரு பிரத்தியோக மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று தெரிவித்த போது, எழும்பூரில் ஒரு குழந்தைகள் மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையில் ஆந்திர பிரதேசம் கர்நாடகா கேரளா தெலுங்கானா போன்ற மாநிலங்களில் இருந்தும் கூட குழந்தைகள் சிகிச்சைக்காக வருகிறார்கள். மற்றொரு மருத்துவமனை கட்ட வேண்டும். சைதாப்பேட்டை கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை வளாகத்தில் குழந்தைகளுக்கான பிரத்தியோக மருத்துவமனை கட்ட வேண்டும் என முடிவு எடுத்து ரூபாய் 480 கோடி செலவில் அந்த மருத்துவமனை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

இன்னும் இரண்டு மாதங்களில் டெண்டர் விடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, கட்டிடம் கட்டும் பணியை இரண்டு மாதங்களில் ஆரம்பிப்பார்கள். இரண்டு வருடத்தில் அதை கட்டி முடித்து விடுவார்கள். தமிழ்நாட்டின் நம்பர் ஒன் மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை அமைந்திருப்பதும் சைதாப்பேட்டையில், இந்தியாவிலேயே நம்பர் ஒன் வயது மூத்தோருக்கான மருத்துவமனை அமைந்திருப்பதும் சைதாப்பேட்டையில், இந்தக் குழந்தைகள் பிரத்தியோக மருத்துவமனை கட்டி விட்டால் உலகத்தில் வேறு எங்கும் இதுபோல் மருத்துவமனை இல்லை என்ற நிலையை அடையும். உலகத்தில் எந்த நாட்டிலுமே குழந்தை களுக்கென்று பிரத்தியோக மருத்துவமனை இல்லை என்ற நிலையை 6 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டத் திட்டமிட்டு இருக்கிறோம்.

### மூன்று வகையான மருத்துவ கட்டமைப்புகள்!

இதை ஏன் சொல்கிறோம் என்றால் இந்த மூன்று வகையான மருத்துவ கட்டமைப்புகள் சைதாப்பேட்டையில் இருக்கிறது. அதேபோல் பெரிய பாலம் கட்டும் பணி தாடண்டர் நகர் தொடங்கி 3.2 கிலோ மீட்டர் தேனாம்பேட்டை வரை செல்கிறது. சைதாப்பேட்டையில் மேம்பாலத்தில் ஏறினால் எந்த சிக்னலிலும் நிற்க வேண்டியதில்லை. நேரம் மிச்சமாகும். ரூ.671 கோடி செலவில் ஜனவரி மாதம் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. அதேபோல் வேளச்சேரி ஹால்டா பக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15 அல்லது 20 நாட்களில் அங்கே கட்டி முடிக்கப்படும் பாலம் தொடங்கி வைக்கபட இருக்கிறது. அந்த மேம்பாலத்தில் ஏறினால் குருநானக் கல்லூரியை தாண்டி போய் இறக்கி விடுவார்கள். இதில் உள்ள எந்த சிக்னலிலும் நிற்காமல் ஐந்து நிமிடத்தில் வேளச்சேரிக்கு சென்று விடலாம். அதேபோல் சைதாப்பேட்டையில் மற்றொரு மகத்தான வேலை மத்திய கைலாஷ் தொடங்கி ஓ.எம். ஆர் ராஜீவ் காந்தி சாலை இவற்றை இணைக்கும் மேம்பாலம் டிசம்பர் மாதம் பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கிறது. இவ்வளவு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இதைவிட மிகப்பெரிய வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் நான் சிறிய வேலைகளை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இவை எல்லாவற்றையும் விட எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்றால் கலைஞர் கணினி கல்வி மூலம் கணினி பயிற்சி அளிப்பதும், தையல் பயிற்சி கற்றுக்கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவது, தையல் பயிற்சி உபகரணங்கள் பெற்றுத் தருவதற்கும் உறுதுணையாக இருப்பது.

708 ஆட்டோக்கள் ஒரு லட்சம் மானியத்தில் சைதைத் தொகுதியில் பெற்று தந்திருக்கிறோம். இதில் 432 ஆட்டோக்கள் பெண்கள் ஓட்டுகிறார்கள். அவர்களுக்கு இலவசமாக டிரைவிங் கற்றுக் கொடுத்தது. டிரைவிங் லைசன்ஸ், பேஜ், யூனிஃபார்ம் என்று அனைத்தையும் செய்து கொடுத்து இருக்கிறோம். மூன்று பெண்களுக்கு தாட்கோ மூலம் கார் வாங்கி கொடுத்திருக்கிறோம். ஆக 435 பெண்கள் சைதை தொகுதியில் வாகனம் ஓட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கிறது. இந்தியாவில் 4132 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கிறது. உலகத்தில் 200 நாடுகள் இருக்கிறது. நான் மகிழ்ச்சியோடு சொல்வேன். சைதாப்பேட்டை என்கின்ற ஒரு சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 435 பெண்கள் வாகனம் ஓட்டுகிறார்கள். இங்கு மிகப்பெரிய சாதனை செய்யப்பட்டிருக்கிறது.

கலைஞர் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தில் அழகு கலை பயிற்சி முடித்த மாணவிக்கு ரூபாய் மூன்று லட்சம் மானியத்தில் 10 லட்சம் கடன் வங்கி மூலம் வாங்கி கொடுத்திருக்கிறோம். 12 பேருக்கு கார் வாங்கி தரப்பட்டுள்ளது. அதில் மூன்று பேர் பெண்கள். இது போன்ற பணிகள் தாட்கோ சமூக நலத்துறை சார்பில் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. சமூக நலத்துறை சார்பில் 122 தையல் பயிற்சி முடித்தவர்களுக்கு டைலரிங் மெஷின் அரசின் சார்பில் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் நவம்பர் 15 அன்று சைதையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட இருக்கிறது. இப்போது அதி நவீன தையல் இயந்திரங்கள் வந்திருக்கிறது. இங்கே பயிற்சி முடித்த பெண்கள் அந்த இயந்திரங்களை வாங்க விருப்பம் தெரிவித்தால், அது வங்கியின் மூலம் பெற்றுத் தருவோம்.

இங்கே பயிற்சி முடித்த பெண்களில் நாலு பேர் சேர்ந்து தொழில் தொடங்கி பெரிய நிறுவனங்களுக்கு துணிகளை தைத்துக் கொடுத்தால் ஈசியாக வேலையும் கிடைக்கும். உங்களுக்கு அப்போது உதவி வேண்டுமென்றால் நானே சிபாரிசு செய்வேன். அதேபோல் நீங்கள் தொழில் முனைவோராக மாறுவதற்கு இது மிகப் பெரிய வாய்ப்பு.

அதேபோல அழகு கலை பயிற்சி முடித்த சகோதரி ஒருவர் தனியார் நிறுவனங்களுக்கு மேக்கப் செய்து கொடுக்கிறேன் என்று தெரிவித்தார். இந்த தொழில் செய்வதற்கு உதவிகள் தேவைப்பட்டாலும் செய்து கொடுக்க தயாராக இருக்கிறோம். தொழில் தொடங்குவதற்கு வங்கிகள் மூலமும் கடன் பெற்று தருவதற்கும் தயாராக இருக்கிறோம். பயிற்சி முடித்து தான் மட்டும் வேலை வாய்ப்பு பெறுவது என்று இல்லாமல், அதையும் தாண்டி அக்கம் பக்கத்தில் இருக்கிற நான்கு பேருக்கும் இதன் மூலம் வேலை கிடைக்கிறது என்றால், பெரிய அளவில் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள். ஒரு பெரிய பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

### தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவிகிதம்!

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 11.19 சதவீதம் என்ற அளவில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அடைய வைத்திருக்கிறார்கள். இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் சராசரி 6.5% ஆகும். ஆனால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவிகிதம். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரண்டு மடங்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதில் குஜராத், கோவா மாதிரியான ஆறு மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சிக்கான பட்டியலிலேயே இடம் பெறவில்லை. இது கடந்த ஆண்டுகளில் ஆறு சதவீதத்திலிருந்து ஏழு சதவீதம் அளவில் இருந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தொழிற்புரட்சி, திறன் மேம்பாட்டு பயிற்சி, புதுமைப் பெண், நமக்கு நாமே, தமிழ் புதல்வன், நான் முதல்வன், போன்ற ஏராளமான திட்டங்கள் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்று தந்திருக்கிறது. இதன் விளைவு 11.19 என்கிற பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இதுபோல் பொருளாதார வளர்ச்சி 2010 -11 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தபோது 13.12% இருந்திருக்கிறது. அதற்குப் பின்பு 14 ஆண்டுகள் பொருளாதார வளர்ச்சி என்பது பத்து சதவீதத்துக்குள்ளேயே இருந்திருக்கிறது. அதன் பிறகு இப்போது தான் வளர்ந்து இருக்கிறது.

இன்றைக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமும், திறன் மேம்பாட்டு பயிற்சி மூலமும், நீங்கள் உங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதன் மூலமும் விடியல் பயணம் மூலமும் 62 லட்சம் பயணங்கள் தினந்தோறும் நடக்கிறது. இத்திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் 780 கோடி பயணங்கள் நடைபெற்றிருக்கிறது. பேருந்தில் இலவசமாக பயணிக்கிறவர்களுக்கு ஒரு மாதம் இலவசமாக 888 ரூபாய் மிச்சபடுத்தப்படுகிறது என்று பொருளாதார அளவுகள் சொல்கிறது. அந்த அளவிற்கு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறிப்பாக பெண்களின் பொருளாதார வளர்ச்சி வளர்ந்து வருகிறது. அந்த வகையில் தான் சைதாப்பேட்டையில் அரசாங்கத்தோடு இணைந்து இயக்கத்தின் நண்பர்களோடு இணைந்து பொருளாதார வளர்ச்சி அடையக்கூடிய திட்டங்களை தொடங்கி நடத்துவதில் பெருமை அடைகிறோம்.

இவ்வாறு கலைஞர் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தில் அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை நிகழ்த்தினார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**என்.எஸ்.முத்துக்குமார்**

**செப்டம்பர் 22 (2022)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழக வளரபாடுபட்டவர்.

1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, "எனது உயிரற்ற உடல் வேண்டுமானல் வெளிய வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்." என்ற முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் கழக மருத்துவரணி மாநில துணைச் செயலாளர், துணை மேயர், மரு.அஞ்சுகம்பூபதி ஏற்பாட்டில் 117 நபர்களுக்கு இலவச தலைக் கவசங்களை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநில சட்டத் திருத்தக்குழு உறுப்பினர் சி.இறைவன், உள்ளிட்ட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




தர்மபுரி கிழக்கு மாவட்டம் ஏ.ஜெட்டிஅள்ளி ஊராட்சியில் தூய்மை இயக்கம் 2.0 பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் தொடங்கி வைத்து,தூய்மை பணியாளர்களுடன் இணைந்து உறுதிமொழியினை ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரூபன்சங்கர்ராஜ்,ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம்,ஊராட்சி செயலர் சித்தேஸ்வரன்,இளங்குமரன்,நீலமேகம்,மற்றும் தூய்மை பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.